# டெல்லி செங்கோட்டையில் நடந்த சித்தாந்த வெறுப்பு;

# சென்னை ஜார்ஜ் கோட்டையில் நிகழ்ந்த ஆனந்தக் களிப்பு!

பிரதமராக நரேந்திர மோடி ஒன்றிய அரசில் பொறுப்பேற்ற நாள் முதலாக சுதந்திரதின விழாவில் கொடியேற்றி வருகிறார். ஷாஜஹான் கட்டிய செங்கோட்டையில் கடந்த ஆகஸ்டு 15 ஆம் தேதி அன்று சுதந்திர நாள் விழாவில் 13ஆவது முறையாகக் கொடியேற்றி வைத்து உரையாற்றி இருக்கிறார். இந்த டெல்லி செங்கோட்டை கொடியேற்று விழாவை எல்லா மக்களும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். ஏன் தெரியுமா?

அவர் ஆற்றுகிற உரையில் ஏதாவது சாதனை செய்திகளைச் சொல்வார் என்று மக்கள் எதிர்பார்த்தார்களா என்றால் அப்படி ஒன்றும் இல்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. சரி, வேறு என்ன?

இல்லை, அவரின் அரசு இந்த 13 ஆண்டுகளில் நாட்டுக்கு ஆற்றிய சாதனைகளைச் சொல்வாரா அல்லது எதிர்காலத்தில் இன்னும் ஆற்றப்போகிற சாதனைகளைப் பட்டியலிட போகிறாரா என்றால் அதுவும் இல்லை. மக்கள் அதனையும் எதிர்பார்க்கவில்லை.

அருணாசல பிரதேசத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சீனா கபளீகரம் செய்து கொண்டு இருப்பதைப் பற்றி நாட்டு மக்களுக்கு வெளிப்படையாகச் சொல்லி சீனாவை சுதந்திர நாள் உரையின் போது நமது பிரதமர் மோடி எச்சரிக்கப் போகிறாரா என்றால் அதுவும் இல்லை. இதைப்பற்றி மக்களுக்குச் சிந்தனையே எழவில்லை. அப்படியானால் பிரதமரிடம் மக்கள் வேறு என்ன எதிர்பார்க்கிறார்கள்?

இந்தியாவின் எல்லைப் புற மாநிலங்களில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் இனப்படுகொலைகள், அரசியல் கலவர எழுச்சிகள், சுதேசியமான மக்களின் விருப்பங்களைத் தீர்த்து வைக்க ஏதாவது உரையில் சொல்வார் என்று மக்கள் எதிர்பார்த்தார்களா என்றால் அதுவும் இல்லை.

அண்மையில் இந்தோனேஷியாவுக்கு பிரதமர் மோடி சென்ற போது நேருவின் பாண்டூங் மாநாடு பேச்சைப் பற்றி நினைவு கூர்ந்தார். நேருவை நல்லமாதிரியாக பாராட்டிக் கூட அதற்காக மோடி பேசினார். அது மாதிரி அமெரிக்கா, சீனா, ரஷியா தொல்லைகளிலிருந்து வெளிபட அணி சேரா நாடுகளை ஒன்று சேர்க்கப் போகிறேன் என்று சுதந்திரநாள் செய்தியாகச் சொல்லக்கூடுமோ, என்றால் அதனையும் மக்கள் எதிர்பார்க்கவில்லை.

அப்படியானால் மக்கள் பிரதமரிடம் என்னதான் எதிர்பார்க்கிறார்கள் என்றால், இந்த ஆண்டு சுதந்திரதின விழா கொடியேற்றத்தின்போது என்ன மாதிரியான தலைப்பாகை, எந்த நிறத்தில் அணிந்து வருவார் என்றுதான் எதிர்பார்த்தார்கள். அதன் மீது மக்களுக்கு அப்படி ஓர் ஆசை. பெரிய சாதனை பாருங்கள், அதனால்தான்!

மக்கள் எதிர்பார்த்தது போல 13 - ஆவது ஆண்டில் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும் மிகுந்த வித்தியாசமான முறையில் தலைப்பாகை பிரதமர் மோடிக்கு அணிக்கு அணி செய்ததுபோல் அமைந்து இருந்தது.

பிரதமர் மோடியின் 'புருஷோத்தம ரூபத்தை' தொலைக்காட்சியில் கண்ட பெருமக்களும் அன்றாட ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் படிப்போரும் தரிசித்தார்கள். இந்த தரிசனம்தான் சாதனைகளின் சுதந்திரதின உச்சமாகும். மற்றென்ன வேண்டும்? சாதனை எல்லாம் எதற்கு?

பிரதமர் மோடியின் சுதந்திரதின உரையில் ஒரு செய்தியுமா, இல்லை; இருந்தது, இல்லை என்று சொல்ல முடியுமா? 75 நிமிடங்கள் உரையாற்றி இருக்கிறாரே. ஆனால் நம்மை கவர்ந்தது பேச்சினூடே அவர் இயம்பிக் காட்டிய ஒரு சொல் 'சித்தாந்த நக்சல்கள்' என்பது!

**பிரதமர் வகையறாக்கள் தேச பக்தி பற்றி முன்பு பேசினார்கள். அப்போதெல்லாம் தேச விரோதிகள் என்று தமக்குப் பிடிக்காதவர்களைப் பரப்புரைகள் மூலம் சாடினார்கள். சுதந்திரதின உரையில் பிரதமர் 'ஆயுத நக்சலைட்டுகள்' ஒழிக்கப்பட்டு விட்டார்கள். ஆனால் சித்தாந்த நக்சலைட்டுகள் இருக்கிறார்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறார். ஒரு புதிய சொல்லை உருவாக்கி இருக்கிறார் பிரதமர் மோடி. அவர் ஒரு சொற்பிறப்பியல் அறிஞராகிவிட்டார்.**

**அதாவது சித்தாந்த நக்சலைட்டுகள் என்ற சொல்லை இப்போது சுதந்திரதின விழாவில் பிரதமர் அறிமுகப்படுத்தி இருக்கிறார். இதற்கு முன்பு 'நகர நக்சலைட்டுகள்' என்று ஒரு சொல்லை உருவாக்கிப் பேசிவந்தார். இப்போது 'நகர நக்சலைட்டுகள்' என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. இப்போது ஒரு புதுச்சொல் அவருக்குக் கிடைத்து இருக்கிறது.**

**பிரதமர் கட்சியினர் அவர்கள் உண்டாக்கும் சொற்களையெல்லாம் ஆயுத மேந்தியவர்களின் மீது மட்டும் வீசுவதில்லை. அவர்களின் சித்தாந்தத்திற்கு எதிராக இருப்பவர்கள் -கட்சிகள் தனி நபர்கள் என எதையும் எவரையும் இச்சொல்லைக் கொண்டு தாக்குவார்கள். இனி, 'சித்தாந்த நக்சல்கள்' எனும் சொல் பயன்படுமாகுக.**

மோடி பங்கேற்ற 13ஆவது சுதந்திர ஆண்டில் இது ஒரு சிறப்பு. இது நம் ஊனக்கண்களுக்குத் தெரிந்தது மட்டுமல்ல மேலும் கொஞ்சம் யோசித்துப் பார்த்தோம். மோடி தமது 13ஆவது சுதந்திரதின விழாவில் 'வந்தே மாதரம்' பாடலை முழுமையாகப் பாடச் செய்து சாதனை புரிந்து விட்டார். இது சரியான சாதனையா?

கடந்த ஆகஸ்டு 13 ஆம் தேதியோடு நடந்து முடிந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் 'வந்தே மாதரம்' பாடலை முழுமையாகப் பாடச் சட்டம் நிறைவேற்றப் பட்டது. அரசியல் நிர்ணய சபையில் இரண்டே சரணங்கள் பாடுவதற்குதான் உகந்தது என ஏற்று இருக்கிறார்கள். 'நீங்கள் இப்படி சட்ட முன் வடிவை நிறைவேற்றுவது மோசடித் தனமானது' என்று நாடாளுமன்ற விவாதத்தின் போது கழக உறுப்பினர் ஆ.இராசா பேசினார். அவர் பேசிக் கொண்டே இருக்கிற போது 'மைக்கை' நிறுத்தி விட்டார்கள். குரல் வாக்கெடுப்பின் மூலம் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டுவிட்டது.

மேலும் சுதந்திரப் போராட்டக் காலத்தில் இப்பாடலின் நிலை என்ன? 1937 அக்டோபர் 28 ஆம் தேதி கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், சர்தார் வல்லபாய் படேல், மௌலானா அபுல் கலாம் ஆசாத், பண்டித ஜவகர்லால் நேரு, ரவீந்தர் நாத் தாகூர், இராஜாஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது வந்தே மாதரம் பாடலின் இரண்டு சரணங்களை மட்டும் பாடினால் போதுமானது என நேரு அப்போது கூறியதை மற்ற தலைவர்கள் ஒப்புக் கொண்டனர்.

**(1) 1937இல் தலைவர்கள் இரண்டு சரணங்களைப் பாடினால் போதும் என்று சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் கூறினர்.**

**(2) அரசியல் நிர்ணய சபையில் வந்தே மாதரம் பாடலின் இரண்டு சரணங்கள் பாடினால் போதுமானது என்று கூறப்பட்டது.**

**(3) கடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் தமிழச்சி தங்கபாண்டியன் இப்பாடல் குறித்துப் பேசி இருக்கிறார். சட்ட முன்வடிவம் தாக்கல் செய்த போது ஆ.இராசா கடுமையான கண்டனம் தெரிவித்து இருக்கிறார். முழுப்பாடலைப் பாடுவதற்குச் சட்டம் கொண்டு வருவது மோசடி என்று அப்போது அவர் கூறி இருக்கிறார்.**

இவ்வளவும் மீறப்பட்டு சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆகஸ்டு 15 சுதந்திரதின விழாவில் முதன் முதலாக வந்தே மாதரம் பாடல் முழுவதுமாக இசைக்கப்பட்டுவிட்டது. ஆக, டெல்லி செங்கோட்டை சுதந்திரதின விழாவில் வழக்கமாகத் தலைப்பாகைக்கு விழா, வந்தே மாதரம் பாடலின் முழு இசைப்பு, சித்தாந்த நக்சல் எனும் சொல்லின் வருகையினால் பிற சித்தாந்த வெறுப்பை பிரதமரின் நடவடிக்கைகள் காட்டி நின்றன. இதுவரை 13 ஆண்டுகள் பிரதமர் மோடி ஆற்றிய சுதந்திரதின விழா உரைகளை ஆய்வு செய்து பார்த்தால் இன்னும் அவரது ஆட்சியின் உள்ளடக்க சாதனைகளை மேலும் அறியலாம்.

டெல்லி செங்கோட்டையின் நிகழ்ச்சிகள் சித்தாந்த வெறுப்பை உமிழ்ந்தது. நமது தமிழ்நாட்டுக் கோட்டை கொத்தள நிகழ்ச்சி புதிய முதல்வருக்கு அரசியல் புத்துணர்ச்சியை ஊட்டியதாகத் தெரியவில்லை. முப்படையின் தென்னக அதிகாரிகள், முதனிலை அரசு அதிகாரிகள் எனத் தலைமைச் செயலாளரின் அறிமுகம் மற்றும் காலை கடல் காற்று சுமந்து வரும் நீரின் துமியளவு (ஒரு துளியின் கண்ணுக்குத் தெரியாத பாகம்) உடலில் பட்டு ஒரு சிலிர்ப்பை முதல்வருக்கு ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதை அவரின் முகத்தில் காண முடியவில்லை.

அரசு என்பது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனம். அது எவர்வரினும் நில்லேன் அஞ்சேன் என்று இயங்கும் நிலையினது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் பிரதிநிதியான புதிய முதல்வரை நிரல்படி அரசு நடத்தியது. அப்படிப்பட்ட அரசாங்கத்தின் ஆணையின் படி முதல்வர் பரிசுகளை வழங்கினார். தகைசால் தமிழர் விருது கடந்த தி.மு.க அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. அதையும் வழங்கினார். தியாகிகளுக்கு சிறப்பூதியங்கள் உயர்த்தப்பட்டன.

பிரதமர் 75 நிமிடங்கள் உரையாற்றினார். தமிழகத்தின் புதிய முதல்வர் 15 நிமிடங்கள் பேசினார். 'த.வெ.க.அரசின் திட்டங்களைப் பட்டியலிட்ட முதலமைச்சர்' என்று ஒரு பத்திரிகை பெட்டிச் செய்தி வெளியிட்டு இருந்தது. இன்னும் நாள்கள் இருக்கின்றன. இப்போது இந்த அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களைப் பற்றி எதுவும் சொல்ல முடியாது. எதைப் பற்றியும் கவலைப்படாத அரசு முதல்வர் உரையில் பெரிதாக ஒன்றையும் சொல்லிவிட முடியவில்லை. புதிய முதல்வரின் த.வெ.க. அரசாங்கம் தனித்தன்மை கொண்டது அல்ல. அது மட்டுமில்லை. அக்கட்சியும் அப்படிப்பட்டதுதான்.

கே.பாலச்சந்தரின் 'புன்னகை' திரைப்படத்தில் ஒரு பாத்திரம், காற்றால் அலைக்கழிகப்பட்ட காகிதம் போல ஒவ்வொரு பாத்திரத்தோடு ஒட்டி இயங்கும். அதைப் போல த.வெ.க. என்பது அரசியல் காற்றால் கோபுர கலசத்தில் ஒட்டிக் கொண்ட காகிதம். ஜனநாயக அரசியல் காற்று செய்த பணி அது!

இக்கட்சி பயின்று வந்த கட்சி அல்ல, தோன்றி, கிளை பரப்பி, தொண்டர்சீர் கண்டு சிற்றூர், பேரூர், நகரம், மாவட்டம், தலைமை என மெல்ல உறுப்பினர் பலம் கொண்டு வளர்ந்த கட்சி இல்லை. அமைப்புக் கூட்டம் இல்லை. கொள்கை பிரகடனம் இல்லை. ஒரு தனி மனிதர் நவீன தொழில் நுட்ப சாதனங்களையும் நாட்டில் நிலவும் சில பலவீனங்களையும் காட்டி அரசியல் வெற்றியை மட்டுமே கொண்டுள்ள புதிய முதல்வர் என்ன அடர்த்தி மிக்க சுதந்திரதின விழா உரையை ஆற்றிவிட முடியும்?



**க.திருநாவுக்கரசு**
**திராவிட இயக்க ஆய்வாளர்**

அப்படி முறையான கட்சி அரசியல் பயின்று இந்த முதல்வர் வந்திருப்பாரானால் 'இந்தியாவில் மாநில முதல்வர்களுக்குத் தேசியக் கொடியைச் சுதந்திரதின விழாவில் உயர்த்துகிற உரிமையைப் பெற்றுத் தந்தவர் கலைஞர் என்று புதிய முதல்வர் தனது உரையின் தொடக்கத்திலேயே பேசியிருப்பார். ஆனால் அவர் அப்படி பேசவில்லை. அந்த நனி நாகரிகத்தை அவரிடம் நாம் எதிர்பார்க்கவும் இல்லை. ஏனென்றால் இவர்கள் கத்துக் குட்டிகளும் இல்லை. அதற்கும் கீழானவர்கள்.

முதல்வர் சுதந்திரதின விழா உரையில் 'இடையில் ஆங்கிலத்தில் பேசினார்' என்று ஒரு பத்திரிகை குறிப்பிட்டு இருக்கிறது. இந்த அமைச்சரவையில் இருக்கின்ற அமைச்சர்கள் என்ன தனித் தமிழில் செறிவான உரையை ஆற்றக் கூடியவர்களா? இல்லை.

ஓர் அமைச்சர் அடிக்கடி குறுக்கீடு செய்து விளக்கம் அளிக்கிறார். அவர் என்ன விளக்கம் அளித்தார் என்றே புரியவில்லை. தமிழும் ஆங்கிலமும் கலந்து நீண்ட நேரம் பேசுகிறார். மறுநாள் ஏடுகளில் பார்த்தால்தான் செம்மைப்படுத்தப்பட்ட பேச்சைப் படித்தால் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழ் அப்படிக் கொஞ்சுகிறது.

ஒரு அமைச்சருக்குப் புள்ளிக்குப் பிறகு எண்ணை எப்படிப் படிக்க வேண்டும் என்று தெரியவில்லை.

ஓர் அமைச்சர் ஆங்கிலத்தில் வல்லவர் என்கிறார்கள். அவர் தமிழைக் கேட்டோம். ஆங்கிலத்தில் அவர் பேச்சைக் கேட்கவில்லை. சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் மதத்தைப் பற்றி பேசுகிறார் ஓர் அமைச்சர். யாரும் கேட்காத ஒரு விஷயத்தை ஏன் பேச வேண்டும் என்று நமக்குப் புரியவில்லை.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசினால் மூன்று அமைச்சர்கள் மட்டுமே மாறிமாறி பதில் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். புதிய முதல்வர் பேசாமல் அமர்ந்து கொண்டு இருக்கிறார். சோலைக் கொல்லை பொம்மை நிறுத்தப்பட்டு இருக்கும். இவர் உட்கார்ந்து இருக்கிறார்; அவ்வளவுதான்!

அரியாசனத்தில் சரியாசனம் இட்டு அமர்ந்திருந்த தமிழ் இன்று சட்டமன்றத்தில் ஆளுங்கட்சியிடம் இல்லை. நாற்றங்கால் இல்லாமலேயே பயிராய் விளைந்தது எப்படி இருக்கும்? அதை நம்பியும் 'இடந் தேடிகள்' ஓடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களை வளர்த்தெடுத்த முதல்வர் என்ன அறிஞர் அண்ணா, கலைஞர் மாதிரியா சுதந்திர தின விழா உரையை நிகழ்த்துவார். அது எப்படி முடியும்?

சுதந்திரதின விழாவில் கோட்டை – கொத்தளம் – கம்பீரக் கொடிமரக் காட்சியோடு – உயர் அதிகாரிகள் – விருந்தினர்கள் – அழைப்பாளர்கள் – அமைச்சர்கள் என எல்லாரும் புடைசூழ அமர்ந்திருந்தார்கள்.

புதிய முதல்வர் சாதனைகளைப் பேசினார். விருதுகளை வழங்கினார். தியாகிகளுக்கு ஒய்வூதியத்தை உயர்த்தினார். இதிலெல்லாம் அவருக்கு புதிய முதல்வருக்கு ஆனந்தக் களிப்பு மேலிடவில்லை. சுதந்திரதின விழாவின் மூலம் முதல்வர் நாட்டு மக்களுக்குப் புதிய செய்தி ஒன்றையும் வழங்கிடவில்லை. அறிவிப்பையும் வெளியிடவில்லை.


தமிழ்நாட்டுச் சுதந்திரதின விழா செய்திகளை நாம் நாளேடுகளில் படித்ததிலிருந்து இரண்டு செய்திகளை அறிந்து கொண்டோம்.

**(1) புதிய முதல்வரின் பேச்சு, 'ஒன்றிய அரசுக்கு ஆதரவு அளிப்போம். மாநில உரிமைகளில் சமரசம் இல்லை' என்று அமைந்து இருக்கிறது. மீனாகவும் விலாங்காகவும் ஒரே நேரத்தில் அவரது உரை உள்ளது. இதற்கு முன்பு 'நாங்கள் ஒன்றிய அரசோடு மோதல் போக்கைக் கடைப்பிடிக்க மாட்டோம்' என்று பேசியிருக்கிறார். இதில்தான் புதிய முதல்வருக்கு ஆனந்தக்களிப்பு ஏற்பட்டுள்ளது. இப்படிப்பட்டவர் தமிழ் நாட்டுக்கு என்ன செய்யப்போகிறார்? இவரைத் தமிழ்நாடு வரவேற்கலாமா? ஆள அனுமதிக்கலாமா? நமது முழக்கம், 'உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்றல்லவா கறாராக இருந்து வருகிறது.**

**(2) மேலே சொன்ன செய்தி ஆனந்தக் களிப்பு, சுதந்திர தின விழாவின் 'ஆனந்தக் களிப்பு மேலீடு' என்ன தெரியுமா? சுதந்திரதின விழாவுக்கு எத்தனை அதிகாரிகள், அயல்நாட்டுத் தூதுவர்கள் என பல்துறை அதிகாரிகள் வந்து இருக்கிறார்கள். புதிய முதல்வரின் பெற்றோர் வந்து இருக்கிறார்கள். நடிகை திரிஷா, அவரது தயார் உமா கிருஷ்ணனோடு வந்திருந்தார். ஒரு நாளேடு இவர்களின் ஒளிப் படங்களை வெளியிட்டு இருக்கிறது. நடிகை வரலாமா? அவரது தாயார் உடன் வரலாமா? என்று நாம் கேட்க வில்லை. உரிய அழைப்பு இருந்தால் எவரும் வரலாம். இவர்களுக்கு வழங்கப்பட்ட அழைப்பு என்ன வகைப் பாட்டின் கீழ் வழங்கப்பட்டு இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது.**

நடிகை திரிஷா சுதந்திர தின விழாவுக்கு வந்ததை நாளேடுகள் குறிப்பிட்டு இருக்கின்றன. இடக்கரடக்கலாகச் செய்தியை வெளியிட்டு இருக்கின்றன. ஏன் இதனை இப்படி எழுதுகிறோம் என்றால் அந்தச் செய்தி அவ்வாறு அமைந்து இருப்பதால்தான்! தினத்தந்தி நாளேடு (16.8.2026) கீழ்க்காணும் விதத்தில் சுதந்திரதின விழாத் துளிகளில் அந்தச் செய்தியை வெளியிட்டு இருக்கிறது. "திறந்த ஜீப்பில் சென்று அணிவகுப்பை பார்வையிட்ட போது முதலமைச்சர் விஜய், கைகளைச் சாய்வாக வைத்து 'சல்யூட்' அடித்தார். பந்தலுக்கு நேர் எதிராக வந்த போது முதலமைச்சர் விஜய்யை நோக்கி அவரைப் போலவே நடிகை திரிஷாவும் பதிலுக்கு கைகளைச் சாய்வாக வைத்து சிரித்தபடி 'சல்யூட்' அடித்தார்" இப்படி வேறு விருந்தினருக்கு முதல்வரின் சிறப்பு 'சல்யூட்' கிடைக்கவில்லையே.

இதுதான் தமிழ்நாட்டுப் புதிய முதல்வரின் சுதந்திரதின விழாவின் போது ஜார்ஜ் கோட்டையில் நிகழ்ந்த 'ஆனந்தக் களிப்பு மேலீடு' செய்தி. இதைவிட தமிழ்நாட்டிற்கு மற்றென்ன வேண்டும்? இது தமிழ்நாட்டு சுதந்திரதின விழாவில் நிகழ்ந்த பிரகடனமாகக்கூட த.வெ.க.வினர் விளக்கக் கூடும். இனி, சின்னச்சின்ன கண்களாலே பெரிய பெரிய காட்சிகளைக் காணக் கூடிய பேறு தமிழ் நாட்டிற்குக் கிடைக்கலாம்.




கடலூர் மாநகர தி.மு.க. சார்பில் தலைவர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவுருவப் படத்திற்கு கடலூர் மாநகர கழகச் செயலாளர் கே.எஸ். ராஜா தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இள. புகழேந்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஜயப்பன், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரி ராஜா ஆகியோர் முன்னிலையில் மரியாதை செலுத்தப்பட்டது. இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் விக்ரமன், பகுதிக் கழக செயலாளர் சலீம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் போதைப் பொருட்களின் நடமாட்டத்தை முற்றிலும் ஒழிக்க கடும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ தலைமையில், ஜி.ஆர்.வசந்தவேல் எம்.எல்.ஏ., தே.மலையரசன் எம்.பி. மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சியர் பத்மஜாவிடம் நேரில் சென்று மனு அளித்தனர். அப்போது மாவட்ட சேர்மன் புவனேஸ்வரி பெருமாள், ஒன்றிய சேர்மன்கள் சத்தியமூர்த்தி, ராஜவேல், தாமோதரன், துணை சேர்மன் நெடுஞ்செழியன் மற்றும் கழக ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.